# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.08.18

ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 12/2016

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

<u>அலுவலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது காயங்களுக்குட்படும் பல்கலைக்கழக ஊழியர்களுக்காக நட்டஈடு வழங்கல்.</u>

**1999.06.10** ஆம் திகதிய, 747 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை, 2013.09.13 ஆம் திகதிய, **13/2013** ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் ஊடாக ஏற்புடையதாக்கிக்கொள்ளப்பட்ட **22 / 93** ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் **2015.10.06** ஆம் திகதிய **13/2013 (i)** ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2016.07.07 ஆம் திகதி நடைபெற்ற 944 ஆவது கூட்டத்தின்போது 22 / 93 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 3(அ) **(i)** உறுப்புரையை பல்கலைக்கழக முறைமையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஏற்புடையதாக்கிக்கொள்ள முடியாது எனும் விடயத்தை கவனத்திற் கொண்ட ஆணைக் குழுவானது, அலுவலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது காயத்திற்குட்படும் ஊழியர்களுக்கு (**13/2013** ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் ஊடாக ஏற்புடையதாக்கிக்கொள்ளப்பட்ட) 22 / 93 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏனைய ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டஈட்டைச் செலுத்துவதற்கான அதிகாரத்தை குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களின் பொது நிர்வாக சபை ஊடாக நியமிக்கப்பட்ட மருத்துவர் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் பொது நிர்வாக சபைகளுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/2/49